Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 மார்கழி (09 - 12 - 1990) ஞாயிற்றுக்கிழமை ஓசை 284

## சிங்கர் ஒயிலுக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

தையல் இயந்திரங்களுக்குப் பாவிக்கப்படும் ''சிங்கர் ஒயில்'' வடபகுதிக்கு விநியோகிக்கப்படுவதை கூட்டுப் படைகளின் தலைமையகம் தடைசெய்துள்ளது. இந்த ஒயிலை விடுதலைப்புலிகள் துப்பாக்கிகளை சுத்தம்செய்வதற்குப் பயன்படுத்துவதாக கூட்டுப்படைகளின் தலைமையகம் கருதுகிறது. இந்த ஒயில் இடைக்காவிட்டால் புலிகளின் துப்பாக்கிகள் துருப்பிடிக்குமென கூட்டுப் படைகளின் தலைமை அலுவலக அதிகாரிகள் கருதுவதாக நம்பப்படுகிறது. (க)

# ரெலோ, ராணுவம் இணைந்து

# 76 தமிழர்களைக் கொன்றனர்!

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் சேர்ந்து நீலாவணையில் எழுபத்தியாறு தமிழர்களை உயிருடன் ரயர் போட்டுக் கொளுத்தினர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: கடந்த வியாழக்கிழமை பரீட்சை எழுதச் சென்ற மாணவர்களையும், ஆண்களையும் ரெலோக் குழுவினரும், இராணுவத்தினரும் சேர்ந்து கைதுசெய்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட எழுபத்தியாறு தமிழர்களும் கொடுமையான சித்திரவதைக்குள்ளானபின்னர் ரெலோ குழுவினரும், இராணுவத்தினரும் சேர்ந்து உயிருடன் ரயர் போட்டுக் கொளுத்தப்பட்டனர். இவர்கள் அனைவரும் துடிதுடித்து மாழும் வரை கொளுத்தியவர்கள் பார்த்துக் கொண்டு நின்றனர்.

## ரெலோவால் தமிழர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

ஆரையம்பதியில் ரெலோக் குழுவினர் செபமாலை (வயது 45 ஆரையம்பதி - 3) என்பவரைச் சுட்டுக் கொன்றனர். இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

## ஆரையம்பதியில் ரேலோவால் தமிழ்ப் பெண் மானபங்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதியில் கடந்த முதலாம் திகதி இரவு நல்லதம்பி அனுசியா (18 வயது) என்ற இளம் பெண்ணை ரெலோ இயக்கத்தினர் மானபங்கம் செய்துவிட்டு கழுத்தை நெரித்துக் கொலை செய்தனர். அவ்விடத்தைவிட்டுப் போகும்போது அவ்வாறு கொலையுண்ட பெண்ணின் சடலத்தை மட்டக்களப்பு வாவியில் எறிந்துவிட்டுச் சென்றனர்.

## மாணவன் கைது

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி இராணுவத்தினர் களுதாவளையில் வைத்து ம. பகிரதன் (வயது 14) என்ற மாணவனைக் கைதுசெய்து களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

## காலிழந்தவர் உயிரிழந்தார்

(நமது நிருபர்)

மாங்குளம் இராணுவ முகாம் இருந்த சூழலில் இராணுவத்தினரால் புதைத்து வைத்திருந்த மிதிவெடியில் தற்செயலாகச்சிக்கிய சு. ஆறுமுகம்(42)என்பவர் ஒருகாலை இழந்தார். கடுமையான இரத்தப்போக்கினால்பின்னர் அவர் மரணமானார். நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

## வினாயகபுரத்தில் இருதமிழர் அதிரடிப்படை சுட்டதால் பலி

(அம்பாறை)

திருக்கோயில் விசேட அதிரடிப்படையினர் வினாயகபுரத்தைச் சுற்றிவளைத்து ஆறு பொதுமக்களைக் கைதுசெய்து அவர்களில் இருவரை அந்த இடத்திலேயே சுட்டுக் கொன்றனர். மீதி நான்கு பேரையும் முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

## சிறுமி காலை இழந்தார்

(திருக்கோணமலை)

தெஹிவத்தை இராணுவ முகாமிலிருந்து இந்த மாதம் 6ஆம்திகதியன்று வெளியேறிய இராணுவத்தினர் 6ஆம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புளியம்பொக்கணையில் விமானக் குண்டு வீச்சு

(நமது நிருபர்)

புளியம்பொக்கணையில் நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சில் ஈடுபட்டன. காலை சுமார் 11 மணியளவில் இடம்பெற்ற இக்குண்டு வீச்சினால் சந்தியிலிருந்த அரிசி ஆலையும் பல வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

## கப்டன் கடாபி இன்று தகனம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் தீரத்துடன் போராடி வீரமரணமடைந்த கப்டன் கடாபி (பாபு) என்ற போராளியின் புகழுடல் இன்றுகாலை 10 மணியளவில் அரியாலை அமரகலா சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் மூன்று மணியளவில் மாவீரர் மயானத்தில் தகனம்செய்யப்படும்.

## நானாட்டானில் குண்டுவீச்சு; மாணவன் பலி! கோயில் சேதம்

(மன்னார்)

மன்னாரில் அச்சங்குளத்தில் நேற்றுமுன்தினம் காலை 6.30 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக் குண்டுவீச்சு விமானங்கள் நான்கு குண்டுகளை வீசின. அதில் மூன்று குண்டுகள் மாத்திரம் வெடித்தன. இந்த வான்தாக்குதலினால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

பின்னர் அன்றுகாலை 9.00 மணியளவில் வானில் வட்டமிட்ட இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் நானாட்டான் பகுதியில் நான்கு குண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பப் பெண் மானபங்கம்

(திருக்கோணமலை)

மூதூர் அரச நெற்களஞ்சிய முகாமிலிருந்து கடந்த மாதம் 28ஆம் திகதி வெளியேறிய இராணுவத்தினர் சம்பூரில் 24 வயதுடைய திருமணமான பெண் ஒருவரை மானபங்கம் செய்துள்ளனர். இவர் இரண்டு பிள்ளைகளின் தாயாவார்.

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி யாழ். வருகை!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உயர் அதிகாரி திரு. கொண்டிசா யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

இவர் வடபகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகளை நேரடியாக பார்வையிடுவார் என்றும் இவரே இலங்கையில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உயர் அதிகாரி என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## மிதிவெடியில் சிக்கிய ஓர் இராணுவம் பலி

(நமது நிருபர்)

கும்புறுப்பிட்டியில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் இரண்டு வெடித்தன. இதில் சிக்குண்ட இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன், மற்றொருவர் காலையும் இழந்துள்ளார். கடந்தவியாழன் அன்று காலை கும்புறுப்பிட்டியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## கிளிநோச்சி உணவு விநியோகம்; செஞ்சிலுவை முயற்சி தோல்வி

கிளிநொச்சி மாவட்டத்தின் உணவுப்பற்றாக்குறையை நீக்குவதற்கு கப்பல்மூலம் உணவுப்பொருள்களை எடுத்து வருவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம்மேற் கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

இந்த மாவட்டத்திற்கு கப்பல்மூலம் உணவுப் பொருள்களை எடுத்துவந்து இறக்குவதற்கு பொருத்தமான இறங்குதுறை எதுவும் இல்லாததனால் இந்த முயற்சி கைவிடப்பட்டது.

இதனால் இந்தப் பகுதிக்கு உணவுப் பொருள்களைத் தரைமார்க்கமாக எடுத்துவருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (க)

## தற்காலிக மின்கோபுரங்கள்; பொறியியலாளர்கள் முயற்சி

(கிளிநொச்சி)

சிறிலங்கா இராணுவத்தினரால் தகர்க்கப்பட்ட மாங்குளம் மின் கோபுரங்களுக்குப் பதிலாக தற்காலிக மின் கோபுரங்களை அமைப்பதற்கு வடபிராந்திய மின்சாரசபை பொறியியலாளர்கள் ஆலோசித்து வருகின்றனர்.

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் மூன்று மின் கோபுரங்கள் தகர்க்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் இப் பகுதியில் நடைபெற்ற விமானக் குண்டுவீச்சு காரணமாக 132 கே. வி. மின்சார இணைப்புக்கள் பல இடங்களில் துண்டிக்கப்பட்டும், சேதமடைந்தும் உள்ளன. எனவே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைதடி வைத்தியசாலையில் புதிய வைத்தியப் பிரிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரேயொரு ஆயுர்வேத வைத்தியசாலையான கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஒரு போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்ட பின்பு மகப்பேற்றுச் சிகிச்சைப்பிரிவு, முறிவுதெறிவு சிகிச்சைப் பிரிவு, விசக்கடிப் பிரிவு, தோல் வியாதிப் பிரிவு ஆகிய பிரிவுகள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இத்துடன் வைத்தியசாலையைச் சூழ்ந்த பகுதியில் ஒரு மூலிகைத்தோட்டமும் அமைக்கப்படவுள்ளதாக அங்கு கடமையாற்றும் வைத்தியர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உலகத் தமிழர் மாநாடு

(கோலாலம்பூர்)

உலகத் தமிழர்களின் முதலாவது மூன்று நாள் மாநாடு புதன்கிழமையிலிருந்துகோலாலம்பூரில் இடம்பெறும். இந்த மாநாட்டை நடத்தும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ வெற்றியை தமிழர் கொண்டாடப் போகின்றனர்

-ஆஞ்சநேயர்

(பாஷையூர்)

எதிர்காலத்தில் எமது மக்களின் முற்றுமுழுதான பங்களிப்புடன் தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றியடையப் போகிறது. இந்த வெற்றியை அடைந்து மக்களும் குதூகலத்துடன் கொண்டாட உள்ளனர். இதனை மாவீரர் தின கொண்டாட்டங்கள் வெளிப்படுத்துவதாக உள்ளன என பாஷையூர் கடற்கரை மைதானத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவாலயத் திறப்பு விழாவில் கலந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256 A பருத்தித்துறை வீதி நல்லூர். ''அரஸ்ஜவுளியகம்'' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R/888)

### லைடன் ரெக்ஸ்ரையில்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். ;B-1656

### அன்ரன் ஆர்ட்ஸ்
### ANTAN ARTS

தொழில் ஸ்தாபனங்களுக்கான விளம்பர பெயர்ப்பலகைகள் குறித்த தவணையில், சிறந்த முறையில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்க. அன்ரன் ஆர்ட்ஸ், C/O டில்கா வாச் வேக்ஸ், டில்கா மேல் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (B /1684)

### இப்பில் இப்பில்

கால்நடைக்கு உணவு, அடுப்புக்கு விறகு இப்பில் இப்பில் நட்டுப் பயன் பெறுவீர் ரூ. 2/- அஞ்சல் முத்திரை அனுப்பி இப்பில் இப்பில் விதை பெறுவீர். மில்க்வைற் யாழ்ப்பாணம். (B-1686)

### The Jaffna Education Centre

யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O/L, A/L Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியும் உண்டு. (B-1657)

---

க.பொ.த சாதாரணதரம்
பகல்முழுநேர வகுப்பு
O/L
**யூனிவேர்சல்**
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

---

## சில்வர் ரேடேர்ஸ்

இல.3B (11), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எங்களிடம் பிஸ்கட் வகைகள், ரொபி, இனிப்பு, தேயிலை, சொப்பிங் பாக், பவுடர் யாவையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(B/1680)

---

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
பிரிவு 3 (8. 30-1. 30)
O/L **DAY CLASSES**
பிரிவு 4 (3. 00 - 5. 40)
**EVENING CLASSES**
புதிய பிரிவு ஆரம்பம் 10. 12. 90
பிரிவு 2 **SAT - SUN** 8. 00 - 1. 00
புதிய பிரிவு ஆரம்பம் 12. 12. 90
ஆண்டு 10, 9, 8, 7, 6 ஆரம்பமாகிவிட்டது
மு.குறிப்பு:- கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.

(B/1685)

---

## உணவு முத்திரை

யாழ்: மாவட்ட பாடசாலைகளுக்கான மதிய உணவு முத்திரைத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு வசதியாக இந்த உணவு முத்திரைகளை கப்பல் மூலம் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

---

## 3 ஆம் வருட வீர நினைவஞ்சலி



### வீரவேங்கை கப்டன் பாரத்
(நடராஜா - தேவராஜா)

பாரத் வீதி, மானிப்பாய்

தாயின்மடியில்: 08 - 02 - 1961
தாயக மண்ணில்: 09 - 12 - 1987

மானத்தின் விளை நிலமாம் மானிப்பதி பிறந்தாய்
மங்காத தமிழ் ஈழ மகிமைக்காய் உயிர்துறந்தாய்
வானத்து வெண்ணிலவாய் வான்வழியாய் சென்றவனே
வாயடைத்து விம்முகின்றோம்; வந்தொருக்கால் பேசாயோ!
கானத்து வேங்கையென களம் புகுந்த திருமகனே
''காந்தி''ப்படையினரை கதிகலங்கச் செய்தவனே
நானிலத்தில் தமிழீழம் (நாளை) நனவாகப் போகுதடா
நாற்றிசையும் உனது புகழ் நறுமணமாய் வீசுமடா
மூன்றாண்டு நினைவலையில் முத்தாக மிளிர்பவனே
மூச்சினிலும் பேச்சினிலும் முனைப்பாக வந்திடடா.

(R/913) மானிப்பாய் வர்த்தகர்கள்.

---

வீரவேங்கை



## தியாகராஜா மன்மதராஜா
(அன்ரன்)

வீரஜனனம் 12-08-1967
வீரமரணம் 09-12-1987

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையவள் மடியினிலே மன்மதராஜா
வன்செயலை ஒழிக்கவந்து அன்ரன் என்றான்
தன்னரிய செயல்களினால் வீரனுமாகி - இன்று
இன்னுயிரை தமிழுக்களித்து தியாகியுமானான்

இந்திய இராணுவத்தின் இதயமற்ற செயல்களை
முந்தி நின்று போர்புரிந்து முதுகென்பை முறிக்கையிலே
சிந்தி விட்டாய் உன்குருதி இனிய தமிழ் மண்ணிற்காய்
வெந்து விட்டோம் நாங்களிந்த தரணியிலே

நண்பனைக் காக்க எண்ணி
நயமுடன் 'குப்பி' தன்னை
உண்டதாலே உந்தன் உள்ளம்
உயர்ந்து தான் போனதன்றோ

செங்கதிர் மலர்ந்து உந்தன்
சிறுமுகம் சிரிக்குமன்றோ?
பொங்கிடும் தமிழால் உன்னை
பாடிட வார்த்தை ஏது?

எங்கள் குடும்பத்தின் இணையிலா செல்வமே
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், அண்ணாமார்,
அக்காமார், தம்பி, தங்கை,
அண்ணி, அத்தான்மார், பெறாமகன்.

''அன்ரன் வீதி''
தாவடி தெற்கு,
கொக்குவில்.

(B/1659)

## சிந்தனைக்கு

*சிங்கம் இறந்துவிட்டால், அச்சிங்கத்தை எட்டி உதைக்கத் தன்னாலும் இயலும் என்று ஒவ்வொரு கழுதையும் எண்ணுகின்றது.*

— ஸேம்யல் பார்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# தன்மானத்தை விற்கும் வாழ்க்கை தேவைதானா?

"வடக்கு கிழக்கில் 'புலிகளுக்கு' எதிரான நடவடிக்கைகளுக்கு ஈ.பி.டி.பி, புளொட், ரெலோ குழுக்கள் எங்களுக்கு உதவுகின்றன. இந்தக் குழுக்களில் புளொட்டைச் சேர்ந்த 160 பேரும், ஈ.பி.டி. பியைச் சேர்ந்த 140 பேரும் எங்களுடன் உள்ளனர். இவர்கள் ஒழுங்காக நடந்துகொண்டால் சிறிலங்கா இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவ்வாறு அவர்கள் நடக்காவிட்டால் தூக்கி எறியப்படுவார்கள்" இவ்வாறு சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன சில தினங்களின் முன் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதேபோன்று இரண்டு மாதங்களுக்கு முன்னரும் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன இந்தக் குழுக்கள் பற்றியொரு கருத்தை வெளியிட்டிருந்தார். 'இவர்கள் (அரசாங்கத்துடன் இணைந்துள்ள குழுக்கள்) பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக எம்முடன் சேர்ந்து நிற்கவில்லை. விடுதலைப் புலிகளுக்குப் பயந்தும், தமது அன்றாடத் தேவைகளுக்கும் - உணவிற்காகவுமே எம்முடன் சேர்ந்து உள்ளார்கள்' என்று தெரிவித்தார்.

அதாவது தமிழருக்கெதிரான யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் தமிழ்க் குழுக்களுக்கு அங்குள்ள வரவேற்பும், கௌரவமும், எதிர்காலமும் எவ்வாறு இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

விடுதலைப்புலிகளை போரில் வெற்றி கொள்ள முடியாத நிலையில் போரை நடத்திக் கொண்டிருக்கையிலேயே அமைச்சர் ரஞ்சனின் கூற்று இவ்வாறு உள்ளது. அதாவது தேவை உள்ள போதே இவ்வாறு கூறும் ரஞ்சன் போரில் தோற்றாலோ, வென்றாலோ இவர்களை எவ்வாறு நடத்துவார் என்பதைப் புரிந்து கொள்ள இவை சில வகை மாதிரிகள் என்றே கொள்ளவேண்டும்.

சிறிலங்கா அரசாங்கம் தங்கள் இராணுவத்துடன் சேர்ந்து ஒத்துழைக்கும் தமிழ் குழுக்களாக இருந்தாலும் சரி, பாராளுமன்றத்தில் இருக்கும் தமிழ் குழுக்களின் கருத்துக்கள் ஆயினும் சரி எவரையும், எப்பொழுதும் பொருட்படுத்தவில்லை என்பதோடு, இனிமேலும் பொருட்படுத்தப் போவதில்லை.

இதனை உணர்த்துவதற்கு சில சம்பவங்களை உதாரணமாகக் கூறலாம். ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பிரேமச்சந்திரன் அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் பேசும்போது தனக்கும், தனது குழுவினருக்கும் கொழும்பில் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்ததோடு, தமது குழுவைச் சேர்ந்த கால்மென்றமாகாணசபை உறுப்பினர் ஜோர்ஜின் மனைவி இராணுவத்தினரால் கடத்தப்பட்டதாகவும் அவரைப்பற்றிய தகவல் எதுவும் இல்லையெனவும் தெரிவித்தார்.

இதேபோன்று மட்டக்களப்பில் ரெலோ உறுப்பினரின் மனைவி ஒருவரும் சிறிலங்கா இராணுவத்தால் மானபங்கம் செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டிருக்கிறார்.

அரசாங்கம் எதிர்பார்ப்பது போன்றே இக்குழுக்கள் நடக்கும்போதே இவ்வாறான நிலை என்றால், அரசாங்கத்திற்கு இவர்களின் தேவை முடியும்போது இவர்களின் கதியைப்பற்றிக் குறிப்பிடவேண்டியதில்லை.

இன்று சிறிலங்கா அரசாங்கம் இவர்களிடம் இருந்து எதிர்பார்ப்பது கோடரிக்காம்பிற்குரிய செயற்பாட்டையே. இதனை மீறி இவர்கள் நடக்க முற்பட்டால், அல்லது கதைக்க முற்பட்டால் இவர்கள் வேண்டப்படாதவர்கள் ஆகிவிடுவார்கள். அப்பொழுது இவர்கள் தூக்கி எறியப் படுவார்கள்.

சிறிலங்காவின் இன்றைய அகராதியில் தூக்கி எறிதல் என்பது வெளியேற்றுதல் என்ற பொருளில் குறிப்பிடப் படுவதில்லை. தூக்கி எறிதல் என்பது நெருப்பில் தூக்கிப் போடுதல் என்பதையே குறிக்கும். இரவோடு இரவாக இரண்டுவருட காலப் பகுதிக்குள் அறுபதினாயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களை தீயிட்டவர்களுக்கு தனது கையிலேயே சிக்கி நிற்கும் முந்நூறு பேரைத் தீயிடல் என்பது ஒரு அற்பவிடயமே.

இக்குழுக்கள்பற்றி சிறிலங்கா அரசாங்கம் கொண்டுள்ள கருத்தில் இருந்து தமிழ்மக்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். பிரச்சினைகள் பலத்தின் அடிப்படையிலேயே பேசித் தீர்க்கப்படவேண்டும். பலவீனமானவர்கள் எதிரிகளினால் தூக்கி எறியப்படலாம். பலமானவர்களை அவ்வாறு தூக்கி எறிந்துவிடமுடியாது. பலமானவர்கள் தூக்கி எறியப்பட்டதாக வரலாறுகள் இல்லை.


# 35

திருக்கோணமலை மாவட்டத்திற்கு திரும்பிய நாம் அங்குள்ள 'இளங்கோ முகாமில்' தங்கினோம். தீபாவளித் தினத்தன்று (17-10-90 புதன்கிழமை) கிழக்கு மாகாணத்தில் உள்ள கிராமியக் கலைஞர்கள் சிலரைச் சந்திக்க வரப் புறப்பட்டோம். வெருகல், மாவடிச்சேனை, மூதூர் துவாரம் போன்ற இடங்களிலிருந்து பல கலைஞர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். திடீரெனவே நாம் இவர்களை அழைத்திருந்தோம். அதனால் இவர்கள் போதிய ஏற்பாட்டுடன் வரவில்லை. எனவே அவர்களைக்கொண்டு கிராமியப் பாடல்களைப் பாடச்சொல்லி அவற்றைப் படமாக்கத் தீர்மானித்தோம்.

சோளம்போச்சு என்று சொல்வது எதிர்பார்க்கக்கூடிய விஷயம்தான். 'சோளமும்போச்சு, உடுக்கும் போச்சு' என்றால் சோளத்துக்கு உள்ள அதேயளவு முக்கியத்துவம் உடுக்குக்கும் அந்த மக்களைப் பொறுத்தளவில் கலைகளை எந்தளவுக்கு நேசிக்கின்றார்கள்; எந்தளவுக்கு கலைகள் அவர்கள் வாழ்வில் ஊடுருவியிருக்கின்றது என்பதற்கு அவரது இந்த வார்த்தைகளே போதும்.

செல்வதற்காகப் புறப்பட்டோம். அப்போது பறட்டைத் தலையுடன் உடுக்கும்கொண்டு சைக்கிளில் ஒருவர் வேகமாக வந்தார். பாடுவதற்காக இவ்வளவு ஆர்வமாக வந்த அந்தக் கலைஞரைத் திருப்பி அனுப்பினால் அந்தக் கலையுள்ளம் வேதனைப் படும் என்பதை உணர்ந்த நாம் அவரைப் பாடச் சொன்னோம். கையில் உடுக்கை வைத்து அடித்தபடியே தன்னைமறந்த நிலையில் அவர் அனுபவித்

## உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அங்கே கூடியிருந்த மக்களைப் பார்த்து ஏதாவது கேட்போம் எனத் தீர்மானித்தேன். விற்பனைக்காக கச்சான் சுருள்களுடன் நின்ற ஒரு சிறுமியைப் பார்த்தேன் இச்சிறுமிக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும். போட்டிருந்த சட்டை இருபக்கத்தாலும் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. தீபாவளித் தினத்தன்று புது ஆடை உடுத்து சந்தோஷமாகக் கொண்டாட வேண்டிய இச்சிறுமி வயிற்றுப்பிழைப்பாக கச்சான் விற்றுக்கொண்டு... அந்தப் பிள்ளையின் ஆடையும்... பிள்ளையை நெருங்கினேன். இன்று எவ்வளவு காசுக்கு வியாபாரம் நடந்தது என்று கேட்டேன். இன்னும் ஒருவரும் வாங்கவில்லை என்றாள். நேரத்தைப் பார்த்தேன். பதினொருமணி. இவ்வளவு நேரமும் வியாபாரம் நடக்கவில்லை. ஆனால் ஏதோ ஒரு நம்பிக்கையுடன் அந்தப்பிள்ளை அங்கே நின்றுகொண்டிருந்தது. பிள்ளையைவிட்டு விலகினேன். அப்போது அருகில் நின்ற ஒருபோராளி 'வீரமரணமடைந்த போராளி மேஜர் பவானின் மருமகள்தான் இந்தப் பிள்ளை' என்று சொன்னார். கட்டைபறிச்சானில் அறுபது இராணுவ கொமாண்டோக்களை சடலமாக்கிய வெற்றிகரமான தாக்குதல் போன்ற பல துணிகரமான தாக்குதல்களில் பங்குபற்றிய போராளியின் குடும்பத்தினர் இந்த நிலையில்,

கொஞ்சம் தள்ளி நின்ற ஒருவரிடம் போனேன். நீங்கள் எந்த ஊர் என்று கேட்டேன். 'பாட்டாளிபுரம்' என்றார். 'பாட்டாளிபுரத்தின் தற்போதைய நிலைமை எப்படி?' என்றுகேட்டேன். 'ஆமி வந்ததால எங்கட சோளமும் போச்சு - உடுக்கும்போச்சு' என்றார். எனக்கு இது புது அனுபவமாக இருந்தது.

ஆலயவீதியில் கலைஞர்களை அமரச் செய்து கிராமியப்பாடல்களைப் பாடச் சொல்லி படமாக்கினோம். இக்காட்சியைக் காண ஏராளமானோர் குழுமியிருந்தனர். எங்கிருந்தாவது ஒரு உடுக்கு எடுத்துவாருங்கள் என்று ஒருவரை அனுப்பினார்கள். நீண்டநேரமாக அவர் வரவில்லை. எனவே ஒரு மிருதங்கம் மட்டுமே பக்கவாத்தியமாக அமைய கச்சேரி தொடங்கியது. பாடகர்கள் எல்லோருமே நாற்பது வயதை தாண்டியவர்கள்தான். மிகவும் உற்சாகத்தோடு பாடினார்கள். ரசிகர்களும் பெரும்பாலோனோர் அதே வயதுதான். நாடகமேடைப் பாடல்களைப் பாடிக்கொண்டிருக்கையில் தன்னை மறந்த நிலையிலொருவர் எழுந்து அபிநயம் பிடித்து ஆடத்தொடங்கி விட்டார். பாடகர்களில் அறுபதுவயதான ஒரு முதியவரே கதாநாயகனாகத் திகழ்ந்தார். 1960க்கு அண்டிய காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைப் பற்றியும் அருமையாகப் பாடினார். சில சிறிய பாடல்களையும் பாடினார். அவரிடம் இன்னும் அதிகமாக எதிர்பார்த்த ரசிகர்களுக்கோ திருப்தியில்லை. "எவ்வளவு நீட்டுப்பாட்டெல்லாம் வச்சிருந்தநீ. இதென்ன கொட்டான்(சிறிய) பாட்டெல்லாம் பாடுறா நீ" என்று அன்புடன் கோபித்துக் கொண்டனர்.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் நடைபெற்ற இக்கச்சேரியின் பின் முகாமுக்குச்

> "சோளமும் போச்சு, உடுக்கும் போச்சு!" என்றால் சோளத்துக்கு எவ்வளவு முக்கியத்துவமோ அதேயளவு உடுக்குக்கும், அந்தமக்களைப் பொறுத்தளவில் கலைகளை எந்தளவுக்கு நேசிக்கின்றார்கள்; எந்தளவுக்கு கலைகள் அவர்கள் வாழ்வில் ஊடுருவியிருக்கின்றன என்பதற்கு அவரது இந்த வார்த்தைகளே போதும்!

துப் பாடிக்கொண்டிருந்தார், காத்தவராயன் கூத்துப் பாடல்கள் அவை. உடுக்கை அவதானித்தேன். பல குஞ்சங்கள் தொங்கின. ஆடைகள் தைக்கும் போது எஞ்சும் கழிவு துண்டுகளால் இக்குஞ்சங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பலவர்ணங்களில் அவை இருந்தன. கலைகளை நேசிப்பதன் இன்னுமொரு அடையாளம் இது.

அவரது பாடல்களை கொஞ்ச நேரம் படமாக்கிய பின் கலைஞர்கள் அனைவரிடமுமிருந்தும் விடைபெற்றுக் கொண்டு மீண்டும் முகாமுக்கு வந்தோம்.

முகாமுக்குத் திரும்பியதும் சில செய்திகள் அறிந்தோம். நாங்கள் மட்டக்களப்புக்கு போகும் போது இருந்ததை விட தற்போது இராணுவ முகாம்கள் கூடியிருக்கின்றன என்பதேஅது. நாங்கள் சென்ற பாதையில் மேலும் நான்கு முகாம்கள் கூடியிருக்கின்றன. ஆகவே நாங்கள் மேலதிகமாக நடக்க வேண்டியிருக்கும். சுற்றுப்பாதை வழியாகவே இந்த முகாம்களை விலத்திச் செல்ல வேண்டும்.

நடப்பதற்கு தயாராக இருந்த வேளை கருணா வந்து சேர்ந்தார். தலைவர் அழைத்திருப்பதால் இந்தப் பயணத்தில் தானும் எம்முடன் இணைந்து யாழ்ப்பாணம் வரப்போவதாகத் தெரிவித்தார். மீண்டும் நடைதொடங்கியது. இப்போது மேலதிகமாக ஆட்கள் இருந்தபடியால் அனுமார் வால்போல வரிசை நீண்டதாகக் காணப்பட்டது. ஏற்கனவே அனுபவித்த சிரமங்களை அனுபவித்துக் கொண்டு நடக்கத் தொடங்கினோம். சில இடங்களில் இராணுவ முகாமில் இருந்து டோர்ச்லைட் அடித்துப் பார்த்தார்கள். எனினும் சிக்கல் ஏதுமின்றி போய்ச் சேர்ந்தோம். பிற்பகல் 3 மணியிலிருந்து இரவு மூன்று மணி வரை இந்தப் பிரயாணம் தொடர்ந்தது.

(தொடரும்)

> "எவ்வளவு நீட்டுப்பாட்டெல்லாம் வச்சிருந்த நீ இதென்ன கொட்டான் பாட்டெல்லாம் பாடுறா நீ"

# தொடர்பு இன்மையினால் செயற்பாடுகள் பாதிப்பு

யாழ். கல்வித்திணைக்களத்திற்கும் திருக்கோணமலை மாகாணசபை கல்வித்திணைக்கள அலுவலகத்திற்கும் இடையிலான கடிதத் தொடர்பு கடந்த பல மாதங்களாக அற்றுப்போனநிலைமையிலுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையால் கல்வித்திணைக்களத்தின் செயற்பாடுகள் பல பாதிக்கப்பட்டுள்ளதுடன் கல்வித்திணைக்களத்திற்கு வழங்கப்படும் சில வழிகாட்டுதல்களும் வந்து சேராததால் யாழ். கல்வித் திணைக்களம் தன்னிச்சையாக இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(லோ

# புலிகளின் ஆயுதங்களை களைவது ஏற்றுக் கொள்ள முடியாது

## ஜனதாதள ராஜ்யசபை 'உறுப்பினர் யஸ்வந்த்சின்

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளை நிராயுதபாணிகளாக்குவது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு ஜனதாதள ராஜ்யசபா உறுப்பினர் யஸ்வந்த்சிங் சமீபத்தில் சென்னையில் கூறினார்.

உடனடியாக யுத்தத்தை நிறுத்திப்பேச்சுவார்த்தையை மேற்கொள்ள இந்தியா உதவுவதோடு, விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே வைப்பதை பேச்சுவார்த்தைக்கான ஒரு முன்நிபந்தனையாக வைக்கக்கூடாது. இன்னுமொரு இணக்கம் ஏற்படும் பட்சத்தில் தமிழர் தற்பாதுகாப்பின்றி வெறுங்கையோடு நிற்கக்கூடாது. வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விடுவதில் சிறிலங்கா அரசாங்கம் பெயர்போனது என்று "இலங்கைச்சிக்கலும், இந்தியாவின் நிலைப்பாடும்" என்ற பொருள் பற்றிச் சென்னையில் ஹோட்டல் சுவாகத்தில் உரைநிகழ்த்தும்போது யஸ்வந்த்சிங் கூறினார்.

சிறிலங்கா ஆயுதப்படைகளின் பலத்துக்கு எதிராக விடுதலைப்புலிகள் சளையாது நின்றுள்ளார்கள். தமிழினம் அழிந்துபோகாமல் புலிகள் ஒரு கேடயமாக நின்று அவர்களைப் பாதுகாத்து வருகிறார்கள். விடுதலைப் புலிகள் இல்லையென்றால்மேலும்பல தமிழர்கள் அழிந்தொழிந்திருப்பார்கள். சிறிலங்கா அரசாங்கம் இனஅழிப்பில் ஈடுபட்டிருக்கும் இந்தவேளையில், இந்தியா பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த முன்வர வேண்டும். யுத்த நிறுத்தம் மாத்திரம் பிரச்சினையைத் தீர்க்காது. அதிகாரப்பரவலாக்கத்தின் கீழ் தமிழருக்கு மேலதிகஅதிகாரங்கள் வழங்கப்படுதல் வேண்டும். இவ்வாறு அவர் பேசும்போது கூறினார்.

சிறிலங்காவின் நிலைமைகள் நாளுக்குநாள் மோசமாகிக்கொண்டிருப்பதாகவும், தமிழர்கள் அங்கு உணவுக்கும் மருந்துக்கும் வழியின்றித் தடுமாறுவது அவமானது. காலம் கடத்தாமல் இந்தியா உடனடியாகத் தலையிடவேண்டும் என்றும் யஸ்வந்த்சிங் தொடர்ந்து பேசும்போது கூறினார்.

# மத்திய அரசாங்கத்திற்கு வி. பி. சிங் எச்சரிக்கை

(சென்னை)

தமிழ் நாட்டிலுள்ள தி.மு.க. அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாகும். அதைக் கவிழ்த்தால் தமிழக மக்கள் மட்டுமல்ல, நாட்டு மக்கள் அனைவருமே சகித்துக் கொள்ளமாட்டார்கள் என்று முன்னாள் பிரதமரும், தேசிய முன்னணித் தலைவர்களில் ஒருவருமான வி.பி. சிங் தெரிவித்திருக்கிறார்.

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீராக இருப்பதாகவும், இதனைக் காரணம் காட்டித் தமிழக அரசைக் கலைக்கக்கூடாதெனவும் அவர் மேலும் கூறினார். தமிழ் நாட்டில் சில தினங்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்காகக்கடந்த வெள்ளியன்று சென்னைக்கு வந்திருந்த அவரை நிருபர்கள் சந்தித்தபோது அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

மேலும் அவர் கருத்துவெளியிடுகையில்;

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தேசிய முன்னணி அரசு தெளிவான கருத்தைக் கொண்டிருந்தது. இலங்கையில் தமிழர்களுக்கு வேண்டிய உரிய அதிகாரம் அளிக்கப்படல் வேண்டும். அவர்களது உயிர், உடைமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும் என்று பலமுறை அந்த நாட்டரசிற்குத் தெளிவாக எடுத்துக்கூறியிருந்தோம். தமிழகத்தில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் பற்றிய புகார் குறித்து அவரிடம் கேட்டபோது, தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு கெட்டுப் போகவில்லை. ஆனால் எந்தவித போராளிக் குழுக்களும் தமிழ்நாட்டை ஒரு களமாகப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. அதேவேளை இலங்கையில் தாக்குதலுக்குள்ளாகிக் காயமடைந்து வருபவர்களைப் பாதுகாக்க வேண்டிய மனிதாபிமானக் கடமை இருப்பதையும் மறுக்க முடியாது என்றார்.

# சமாதான சபை யோசனைக்கு ஈராக் வரவேற்பளித்துள்ளது

(புதுடில்லி)

உலக சமாதானசபை கூறிய புதிய ஆலோசனையை ஈராக் வரவேற்றுள்ளது. உலக சர்ச்சுகள் சபையின் தலைவரான போலோஸ் கிறிஸ் மாக்கோஸ் இத்தகவலை நேற்று முன்தினம் புதுடில்லியில் வெளியிட்டார்.

அரபுப் பிரதேசத்திலிருந்து இஸ்ரேலியரும், சைப்பிரசில் இருந்து துருக்கியரும், லெபனானிலிருந்து சிரியர்களும் வெளியேறுவது பற்றிக்கொள்கையளவில் இணக்கம் கண்ட பின்னர் குவைத்திலிருந்து ஈராக் வெளியேறுவது பற்றிப் பேசலாம் என்பதுவே அந்த யோசனையாகும். ஈராக்கிற்கு ஐ.நா. விடுக்கும் கடைசி எச்சரிக்கை பயனில்லாமல் போய்விடும் என்பதால் ஐ.நா. வில் இந்த யோசனையை சில நாடுகள் வெளியிடக்கூடும் என்றும் திரு. போலோஸ் கூறியிருக்கின்றார்.

சவூதி அரேபியா, ஈராக், ஜோர்டான் ஆகிய நாடுகளுக்குச் சென்ற தூதுக் குழுவில் திரு. போலோஸும் இடம் பெற்றிருந்தார் இத் தூதுக் குழுவினர் வெளிநாட்டிலுள்ள குவைத் அரசு உட்படச் சம்பந்தப்பட்ட அனைவருடனும் பேச்சு நடத்தியுள்ளனர்.

## முபாரக் கட்சி வெற்றி

எகிப்தில் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அதிபர் கொஸ்னி முபாரக்கின் ஆளும் கட்சி பெரும் வெற்றி பெற்றுள்ளது. மக்கள் சட்டப் பேரவைத் தேர்தலுக்கான இரண்டாம் சுற்று வாக்கெடுப்பு சென்ற வியாழக்கிழமை நடந்தது. இந்தவாக்கெடுப்பிலேயே அதிபர் கொஸ்னி முபாரக்கின் ஆளும் கட்சி பெரும் வெற்றி ஈட்டியிருக்கிறது.

## மட்டக்களப்பில் வெள்ளம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பகுதியில் கடந்த இரு வாரங்களாகப் பெய்த கடும் மழையினால் பலத்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இந்த வெள்ளப்பெருக்கினால் மட்டக்களப்பு வாவி பரந்து ஓடுவதாகவும், மண்டூர் அம்மன்கோவில்வரைபரவைக் கடல் போலக் காட்சி தருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் இராணுவ நடவடிக்கைகளால் வீடுகளை இழந்து பெரும் அவதிக்குள்ளாகி இருக்கும் மக்கள் மேலும் பெரும் இன்னலுக்கு உள்ளாகி உள்ளனர்.

## "குமணவில்" நோயாளர் பயணம்

(நல்லூர்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வைத்திய சாலைக்குச் சிகிச்சைக்காகச் செல்லும் 23நோயாளிகளுடன், 23 உதவியாளர்களும், 3 வைத்தியர்களும் 3 தாதிமார்களும் இன்று காலை செல்லுகின்றனர். யாழ். போதனா வைத்தியசாலை வாகனம், சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வாகனம், இலங்கைச்செஞ்சிலுவைச்சங்க வாகனம் என்பவற்றின் மூலம் பருத்தித்துறையை அடையும் இவர்கள்அங்கிருந்து "குமண" கப்பல் மூலம் கொழும்பு செல்லவுள்ளனர். (85)

# வவுனியா தெற்கு சங்கத்திற்கு இருபது இலட்சம் நஷ்டம்

(வவுனியா)

கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது வவுனியா தெற்குதமிழ்ப்பகுதி கூட்டுறவு சங்க சமாஜத்திற்கு இருபது இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று இந்தச் சமாஜத்தின் அதிகாரி ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

வவுனியா நகரப்பகுதி கூட்டுறவுக் கிளைகள் பலவற்றில் இருப்பிலிருந்த உணவுப் பொருள்கள் உட்பட பெறுமதிவாய்ந்த தளபாடங்களும், பெருந்தொகையான பணமும் சூறையாடப் பட்டிருப்பதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கையின் போது கூட்டுறவுச்சங்கக் கட்டடங்கள் பல சேதமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (தி)

# ஊரடங்கு வேளையில் கொழும்பு சென்ற அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட கல்வித்திணைக்களத்தில் கடமை புரிந்துவந்த பதின்மூன்று உத்தியோகத்தர்கள் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஊரடங்கு வேளைகளில் தென்பகுதிநோக்கிச் சென்றுவிட்டனர். இதனால் கல்வித் திணைக்களத்தின் பொறியியலாளர் ஒருவரின் மேசை உட்பட பலமேசைகள் காலியாக உள்ளன.

இந்த நிலைபற்றி வடமாகாண கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவிக்கையில் கொழும்பு நோக்கிச் சென்றுவிட்ட உத்தியோகத்தர்கள் திரும்பிவரமுடியாது போயுள்ளதாகவும் இவர்கள் தென்பகுதியில் நிலவும பதற்ற நிலையால் இங்கு வருவதற்கு பெரும் கஷ்டங்களை இப்போது அனுபவித்து வருவதாகவும் கூறினார். அத்துடன் இந்தப் பதின்மூன்று உத்தியோகத்தர்களின வேலையையும் இங்கே உள்ள உத்தியோகத்தர்களே செய்துவருவதாகவும் அவர் கூறினார். (லோ)

# கா. கூ. தாபனக் கட்டடத்திற்கு ஐந்து இலட்சம் ரூபா நஷ்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா முப்படைகளின் தாக்குதலால் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண அலுவலகக் கட்டடத்திற்கு சுமார் ஐந்து லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது

இந்தக்கட்டடத்திற்கு ஏற்பட்ட சேதவிபரம் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை அண்மையில் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தைத் திருத்தி அமைப்பதற்குத் தேவையான பணத்தை ஒதுக்குவதாகவும் ஆனால் உடனடியாகத் திருத்த வேலைகளை ஆரம்பிக்க வேண்டாமென்றும் தலைமை அலுவலக அதிகாரிகள் கூறியதாக இந்த அலுவலகத்தின் கணக்காளர் தெரிவித்தார். (க)

தற்காலிக

இப் பகுதிக்கு சென்று திருத்த வேலைகளை செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகியதும் வடபகுதி மின்சாரசபையினரால் இத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்காக தகர்க்கப்பட்ட மூன்று மின் கோபுரங்களுக்கு பதிலாக தற்காலிகமாக நாற்பது அடி உயரமுள்ள மரத்தினால் ஆன மின் கம்பங்களைப் பாவித்து தற்காலிக மின் கோபுரங்கள் அமைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி மின்சாரசபை பொறியியலாளர்கள் தற்போது ஆலோசித்து வருவதாகவும் இதை செயற்படுத்துவது பற்றிய முடிவு ஏற்பட்ட சேதத்தின் தன்மை பற்றி நேரடியாக பார்வையிட்ட பின்னரே எடுக்கப்படும் என்று மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

சிறுமி

கொலனி ஊடாக ரோந்து செல்லும் போது, அங்கு மிதிவெடிகளைப் புதைத்துவிட்டுச் சென்றுள்ளனர். இந்த மிதிவெடிகள்ஒன்றில் சிக்கிய எட்டு வயதுச் சிறுமிஒருத்தி தனது வலது பாதத்தை இழந்துள்ளார்.

நானாட்டானில்

களை வீசின இந்தத் தாக்குதலினால் நானாட்டானைச் சேர்ந்த ஜீவன் என்ற மாணவன் மரணமடைந்தார். அம்மன்கோயில் ஒன்றும் பாரிய சேதத்துக்குள்ளாகியது.

கைதடி

ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வைத்தியசாலையை போதனாவைத்தியசாலையாக மாற்றுவதில் சித்த மருத்துவ பல்கலைக்கழக மாணவர்களும், நோயாளர் நலன்புரிச் சங்கமும் பெரும் பாடுபட்டதாகவும், இறுதியில் இதில் வெற்றியடைந்ததாகவும் தெரிவித்தார். (லோ)

தமிழீழ

கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட பிரச்சாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் தெரிவித்தார்.

பாஷையூர் சித்திரா ரவையினரால் நடாத்தப்பட்ட இந்த எழுச்சி நிகழ்ச்சிகளில் பல கலைநிகழ்ச்சிகள், நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டுகள் நடைபெற்றன. மாவீரர் நாளை முன்னிட்டு கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்ற இந்த கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பிரதிநிதி மரிச லப்பா உட்பட மேலும் பலர் உரையாற்றினர்.

உலகத் தமிழர்

உலகத் தமிழர்கள் சம்மேளனத்தின் தலைமைச் செயலர், உககெங்கிலுமிருந்து சுமார் ஆயிரம் பிரதிநிதிகள், இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகச் சொன்னார். இதில்உலகத்தமிழர்பல்கலைக்கழகம் அமைக்கப்படும் சாத்தியக்கூறு ஒன்று பற்றியும், உலகின் எந்தப் பகுதியிலும் தகுதியான தமிழர்களுக்கு பணஉதவிசெய்வதற்காக உலகத் தமிழர் வங்கி ஒன்றை அமைப்பது பற்றியும் விவாதிக்கப்பட இருக்கின்றது.

## பஞ்சத் திருடர்!

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு ஆலடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் கூரையைப்பிரித்து உட்புகுந்த திருடர்கள் அவ்வீட்டில் வைக்கப்பட்டிருந்த நிவாரண உணவுப் பொருள்களையே கூடுதலாக எடுத்துச் சென்றுள்ளனர். வீட்டின்உரிமையாளரான திருமதி சிவானந்தலோசனி என்பவர் சொந்த விடயமாக யாழ்ப்பாணம் சென்றிருந்த போதே மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (22)

## வேம்படி முன்மாதிரி

(நல்லூர்)

வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சுற்றுப்புறப் பகுதிகளை நேற்று துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். (85)

## மரண தண்டனை

மன்னாரில் ஹெலன் என்று அழைக்கப்படும் அன்னபூரணி (வயது 29) தகாத முறையில் இராணுவத்துடன் உறவு கொண்டும், மற்றும் சமூக விரோத நடவடிக்கையில் ஈடுபட்டுமிருந்தார் என்ற குற்றத்திற்காக கடந்த 4 ஆம் திகதி இரவு 9மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகளாலவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மூன்று முறைகள் திருமணம்செய்த இவரின்தொழில் வடிசாராய உற்பத்தி செய்து விற்பனை செய்வதாகும்.

## ஆதாரம் காட்டிப் பெறவும்

றலி செயின் கவர் போடப்பட்டதும்சில்வர்கலர் மக்காட் கொண்டதுமான சைக்கிள் ஒன்று மானிப்பாய் பிரதேசக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. உரியவர்கள் நேரில் வந்து தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

## வைத்தியசாலை இடம் மாற்றம்

மல்லாவி அரசினர் வைத்தியசாலை வவுனிக்குளம் 3 ஆம் யூனிற்றுக்கு மாற்றப் பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலை மீது 30-11-90 அன்று பகல் 1 மணியளவில் நான்கு விமானங்கள் ஆகாயத்தில் வட்டமிட்டு பீப்பாக் குண்டு வீசியதால் மேற்படி வைத்தியசாலை 3ஆம் யூனிற்றிலுள்ள தனியார் கட்டடமொன்றுக்குமாற்றப்பட்டுள்ளது. (49

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.